ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.3 – வெள்ளைச் சுரிசங்கு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.3 – வெள்ளைச் சுரிசங்கு

‡ வெள்ளைச் சுரி சங்கொடாழி ஏந்தித் ⋆
தாமரைக் கண்ணன் என் நெஞ்சின் ஊடே ⋆
புள்ளைக் கடாகின்ற வாற்றைக் காணீர் ⋆
என் சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள் ⋆
வெள்ளச் சுகம் அவன் வீற்றிருந்த ⋆
வேத ஒலியும் விழா ஒலியும் ⋆
பிள்ளைக் குழா விளையாட்டொலியும் அறாத் ⋆
திருப்பேரையில் சேர்வன் நானே ॥ **7.3.1** ॥

நானக் கருங்குழல் தோழிமீர்காள் ! ⋆
அன்னையர்காள் ! அயல் சேரியீர்காள் ⋆
நான் இத்தனி நெஞ்சம் காக்க மாட்டேன் ⋆
என் வசம் அன்றிதிராப் பகல் போய் ⋆
தேன் மொய்த்த பூம் பொழில் தண் பணை சூழ் ⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த ⋆
வானப் பிரான் மணி வண்ணன் கண்ணன் ⋆
செங்கனி வாயின் திறத்ததுவே ॥ **7.3.2** ॥

செங்கனி வாயின் திறத்ததாயும் ⋆
செம் சுடர் நீள் முடித் தாழ்ந்ததாயும் ⋆
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும் ⋆
தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும் ⋆
திங்களும் நாளும் விழா அறாத ⋆

தென் திருப்பேரையில் வீற்றிருந்த ⋆
நங்கள் பிரானுக்கென் நெஞ்சம் தோழி ! ⋆
நாணும் நிறையும் இழந்ததுவே ॥ **7.3.3** ॥

இழந்த எம்மாமை திறத்துப் போன ⋆
என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார் ⋆
உழந்தினி யாரைக் கொண்டென் உசாகோ ⋆
ஓதக் கடல் ஒலி போல ⋆
எங்கும் எழுந்த நல் வேதத்தொலி நின்றோங்கு ⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த ⋆
முழங்கு சங்கக் கையன் மாயத் தாழ்ந்தேன் ⋆
அன்னையர்காள் ! என்னை என் முனிந்தே ॥ **7.3.4** ॥

முனிந்து சகடம் உதைத்து மாயப் பேய் முலை உண்டு ⋆
மருதிடை போய் ⋆
கனிந்த விளவுக்கு கன்றெறிந்த ⋆
கண்ண பிரானுக்கென் பெண்மை தோற்றேன் ⋆
முனிந்தினி என் செய்தீர் அன்னைமீர்காள் ⋆
முன்னி அவன் வந்து வீற்றிருந்த ⋆
கனிந்த பொழில் திருப்பேரையிற்கே ⋆
காலம் பெற என்னைக் காட்டுமின்னே ॥ **7.3.5** ॥

காலம் பெற என்னைக் காட்டுமின்கள் ⋆
காதல் கடலின் மிகப் பெரிதால் ⋆
நீல முகில் வண்ணத்தெம் பெருமான் ⋆
நிற்கும் முன்னே வந்தென் கைக்கும் எய்தான் ⋆
ஞாலத்தவன் வந்து வீற்றிருந்த ⋆
நான்மறையாளரும் வேள்வி ஓவா ⋆

கோலச் செம் நெற்கள் கவரி வீசும் ⋆
கூடு புனல் திருப்பேரையிற்கே ॥ **7.3.6** ॥

பேர் எயில் சூழ் கடல் தென் இலங்கை செற்ற ⋆
பிரான் வந்து வீற்றிருந்த ⋆
பேரையிற்கே புக்கென் நெஞ்சம் நாடிப் ⋆
பேர்த்து வர எங்கும் காண மாட்டேன் ⋆
ஆரை இனி இங்குடையம் தோழி ! ⋆
என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை ⋆
ஆரை இனிக் கொண்டென் சாதிக்கின்றது ⋆
என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே ॥ **7.3.7** ॥

கண்டதுவே கொண்டெல்லாரும் கூடிக் ⋆
கார்க்கடல் வண்ணனோடென் திறத்துக் கொண்டு ⋆
அலர் தூற்றிற்றது முதலாக் ⋆
கொண்ட என் காதல் உரைக்கில் தோழி ⋆
மண் திணி ஞாலமும் ஏழ் கடலும் ⋆
நீள் விசும்பும் கழியப் பெரிதால் ⋆
தெண் திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த ⋆
தென் திருப்பேரையில் சேர்வன் சென்றே ॥ **7.3.8** ॥

சேர்வன் சென்றென்னுடைத் தோழிமீர்காள் ! ⋆
அன்னையர்காள் ! என்னைத் தேற்ற வேண்டா ⋆
நீர்கள் உரைக்கின்றதென் இதற்கு ⋆
நெஞ்சும் நிறைவும் எனக்கிங்கில்லை ⋆
கார் வண்ணன் கார்க் கடல் ஞாலம் உண்ட ⋆
கண்ண பிரான் வந்து வீற்றிருந்த ⋆

ஏர் வள ஒண் கழனிப் பழனத் ⋆
தென் திருப்பேரையின் மாநகரே ॥ **7.3.9** ॥

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன் ⋆
நாண் எனக்கில்லை என் தோழி மீர்காள் ⋆
சிகரமணி நெடு மாட நீடு ⋆
தென் திருப்பேரையில் வீற்றிருந்த ⋆
மகர நெடுங்குழைக் காதன் மாயன் ⋆
நூற்றுவரை அன்று மங்க நூற்ற ⋆
நிகரில் முகில் வண்ணன் நேமியான் ⋆
என் நெஞ்சம் கவர்ந்தெனை ஊழியானே ॥ **7.3.10** ॥

‡ ஊழி தோறூழி உருவும் பேரும் ⋆
செய்கையும் வேறவன் வையம் காக்கும் ⋆
ஆழி நீர் வண்ணனை அச்சுதனை ⋆
அணி குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
கேழில் அந்தாதி ஓராயிரத்துள் இவை ⋆
திருப்பேரையில் மேய பத்தும் ⋆
ஆழி அங்கையனை ஏத்த வல்லார் அவர் ⋆
அடிமைத் திறத்தாழியாரே ॥ **7.3.11** ॥

அடிவரவு — வெள்ளை நான செங்கனி இழந்த முனிந்து காலம் பேரெயில் கண்டதுவே சேர்வன் நகரமும் ஊழிதோறு ஆழியெழ

வெள்ளைச் சுரிசங்கு முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்